[6th March 1965

திரு. மீ. கலியாணசுந்தரம்: கறுப்புக்கொடி காட்டியவர்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கவில்லை. அப்படி இருக்க அமைதிக்கு பங்கம் விளைவிக்கிறார்கள் என்று யாரை கருதினார்கள்? கருப்புக்கொடி காட்டியவர்களை கைது செய்யக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அமைதிக்கு பங்கம் வரக்கூடிய நிலைமையை தவிர்க்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. உணவுப் பற்றாக்குறை கொந்தளிப்பு இருந்தது. அதை மேலும் அதிகப்படுத்தக்கூடிய வகையில், கறுப்புக் கொடி காட்டுவதால் கொந்தளிப்பு அதிகரிக்கும் ஆதலால், அதைத் தடுக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது.

திரு. கே. ஏ. மதியழகன்: முன்பு ஜவஹர்லால் நேரு அவர்கள் வந்தபோது ஆகாயவிமான நிலயத்திலே கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்யலாமென்று இடம் ஒதுக்கி, அமைச்சர், மற்றவர்கள் போவதற்கு இடம் அமைத்து, போலீசார் ஒத்துழைக்கும் படியாக செய்த அதேமாதிரி ஏற்பாட்டை இனிமேலாவது அனுசரிக்கலாமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: என்னென்ன ஏற்பாடு செய்யலாமோ, அந்தந்த நிலைமைக்கு ஏற்றவாறு கவனம் செலுத்தப்படும்.

தமிழ்நாட்டில் குடியரசுக் கட்சியின் கிளர்ச்சி

*** 164 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) டிசம்பர் 6ம் தேதி இந்தியக் குடியரசுக் கட்சியின் தமிழ்நாடு கிளை (Republican Party) போராட்டம் ஒன்று நடத்தப்போவதாக அரசாங்கத்திற்கு அறிவித்ததா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

(உ) இதன் விளைவாக கைது செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: *(a)* & *(b)* No intimation was received, but the Government were aware of the party's intention to agitate in support of its 'Charter of Demands', which included the installation of the portrait of Dr. Ambedkar in Parliament House, the allotment of lands to landless people of the depressed classes, the arresting of the prices of food stuffs, etc; and

(c) six hundred and ten persons were arrested during the course of the agitation.

திரு. இராம. அரங்கண்ணல்: தரிசு நிலங்களை ஜனங்களுக்கு பட்டா செய்து தருவதற்காக, ஆதி திராவிடப் பெருங்குடி மக்கள் ஈடுபட்டு செய்த கிளர்ச்சி இது. அந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தரிசு நிலங்கள் கூடியவரையில் நிலம் இல்லாதவர்களுக்கு, முக்கியமாக ஹரிஜன மக்களுக்கு அளிக்கபட்டு வருகிறது. ஆனால் எத்தகைய நிலம் என்று பார்க்காமல் பலாத்காரமாக காட்டு இலாகா நிலமாக இருந்தாலும் நாங்கள் ஆக்கிரமிப்போம் என்றால் அது முறையல்ல.

திரு. ர. ஜீவரத்தினம் : குடியரசு கட்சியில் நில ஆக்கிரமிப்பு போராட்டத்தில் தவறுதலாக ஈடுபட்டோம், இனி ஈடுபடமாட்டோம் என்று எத்தனை பேர்கள் சர்க்காருக்கு கடிதம் எழுதிவிடுதலை ஆகியிருக்கிறார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றி என்னிடம் தகவல் இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : ஆதித்திராவிட மக்களை 'ஆண்டவன் குழந்தைகள்' என்று காந்தியடிகள் வர்ணித்து இருக்கிறார்கள். இந்தக் காரணத்தால் தரிசாக இருக்கிற கோயில் நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க அரசாங்கம் உத்திரவு பிறப்பிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தரிசு நிலங்களை பட்டா செய்து கொடுக்கலாம். 'ஆண்டவன் குழந்தைகள்' என்றாலும் ஆக்கிரமிப்பு செயல்களிலே ஈடுபடக்கூடாது.

கனம் சபாநாயகர் : அவர்கள் மட்டும்தான் 'ஆண்டவன் குழந்தைகளா'? (சிரிப்பு)

திரு. மீ. கலியாணசுந்தரம் : அவர்கள் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார்கள்? வழக்குகள் போடப்பட்டனவா? இப்போது எந்த நிலையில் உள்ளன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வட ஆற்காடு இன்னும் சேலம் ஜில்லாக்களிலே இது நடந்தது. காட்டு இலாகா மற்றும் இதர நிலங்களை தாங்களே ஆக்கிரமிக்க முற்பட்டார்கள். இந்த காரணத்திற்காக இதை தவிர்க்கும் வகையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது. இப்போது அவர்கள் சிறையில் இல்லை.

டாக்டர் பா. நடராஜன்: குடியரசு கட்சியின் தலைவர் யார்? இந்தக் கட்சி எப்போது தொடங்கப்பட்டது என்ற விவரம் அரசாங்கத்திடம் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரையில் காலஞ்சென்ற திரு. சிவராஜ் தலைவராக இருந்தார்கள். அதற்கப்புறம் யார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று எனக்கு நினைவு இல்லை.

[6th March 1965

திரு. அ. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, அத்துமீறிய ஆக்கிரமிப்பை அனுமதிக்க முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி ஆக்கிரமித்து கொண்டவர்கள் அந்த இடத்திற்கு காமராஜபுரம் என்று பெயர் வைத்தாலோ அல்லது ஆளும் கட்சியினருடைய கொடியை நாட்டி வைத்தாலோ அதை அனுமதிக்கிறார்கள் என்பது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கொடியை பொறுத்தவரையில் அது மாறிக்கொண்டேவருகிறது. ஒரே இடத்தில் பல கொடிகள் இருக்கின்றன. எந்தக் கொடியாக இருந்தாலும், நடவடிக்கை எடுத்துக்கொள்வதோ, எடுத்துக்கொள்ளாமல் இருப்பதோ குறிப்பிட்ட சம்பவத்தைப் பொறுத்து இருக்கிறது.

திரு. கோ. சி. மணி : இந்த நிலங்களிலே தரிசு நிலங்கள் என்று சரியாக தெரிந்திருக்கும் நிலங்களை உடனடியாக பட்டா செய்து கொடுக்க எண்ணம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: புதிதாக எண்ண வேண்டியது இல்லை. அரசாங்கம் இதில் எல்லாம் தொடர்ந்து கவனம் செலுத்திக் கொண்டு இருக்கிறது.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, தரிசு நிலங்களை ஹரிஜனங்கள் மற்றவர்களைப் போலவே ஆக்கிரமித்து வருகிறார்கள். சில பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் மற்றவர்களை நீக்காமல், ஹரிஜனங்களை மட்டும் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா? அப்படி என்றால் இதைத் தவிர்க்க அரசாங்கம் தனி உத்திரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : குறிப்பிட்ட சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கோ அல்லது கேள்விமூலமாகவோ பஞ்சாயத்து யூனியன் இந்தந்த வகையில் இன்னின்னார்மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள், எடுக்கவில்லை என்று தெரிவித்தால் அதற்குமேல் கவனம் செலுத்தலாம்.

திரு. பி. முருகையன் : கைது செய்யப்பட்டவர்கள்மீது வழக்குகள் போடப்பட்டனவா, எத்தனை வழக்குகள் முடிவடைந்துவிட்டன என்பதை அமைச்சர் அறிவிப்பாரா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : மைலாபூர் தொகுதியில் கபாலீச்வரர் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன, அங்கே ஆதித் திராவிட பெருங்குடி மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வெளியேற்றி அந்த இடங்களை எல்லாம் ஏலம் போட்டு பணம் வசூலிப்பதற்கு அற நிலைய பாதுகாப்பு இலாகா முற்பட்டிருக்கிறது. அதே மக்களுக்கு என்ன விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதோ அந்த விலைக்கு விற்க உத்திரவு பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

6th March 1965]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இது வேறு விஷயம். கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இதில் அக்கறை உண்டு. என்னிடம் பேசி இருக்கிறார்கள். ஏலம் போடுவதென்றால் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு ஏலம் போடுகிறார்கள். தனியாக குறிப்பிட்ட பிரச்னையைப்பற்றி கேள்வி போட்டால் விடை அளிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே, காட்டு இலாகாவிற்குச் சொந்தமான இடங்களைச் சில பணக்காரர்களுக்குத் துரிதமாகப் பட்டா போடக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறதே அது எந்த அடிப்படையில் ஏற்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அடிப்படையைச் சொல்வதற்கு முன்பு, என்ன வகையிலே, யார் யாருக்கு, எங்கெங்கே பட்டா போடப்பட்டது என்று கனம் அங்கத்தினர் குறிப்பிட்டால், அதற்குப் பிறகு அங்குள்ள நிலைமையை விளக்க முடியும்.

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, இது போன்ற புறம்போக்கு நிலங்களை ஏழை அரிசன மக்கள் பல ஆண்டுகாலம் அனுபவித்து வந்தும்கூட, அந்த நிலங்கள் அவர்களுக்கு அடைமானம் செய்து கொடுக்கப்படாத காரணத்தால், இந்தப் போராட்டம் வந்தது என்பதை அரசாங்கம் உணருமா ? அப்படியென்றால், புறம்போக்கு நிலங்களை உழுது அனுபவித்து வந்திருக்கும் அரிசன மக்களுக்கு அந்தந்த நிலங்களை விரைவில் அடைமானம் செய்து கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம் என்று சொன்னேன். நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிற விஷயம் என்றும் சொன்னேன், அதற்காகச் சிலர் அதிக்கிரமமாக ஆக்கிரமித்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது.

திரு. டி. கார்ச்சா கவுடர் : ஏற்கெனவே, பத்துப் பன்னிரண்டு வருஷங்களாக ஆக்கிரமிப்புச் செய்த பூமிகளை அவரவர்களுக்கே ரெகுலரைஸ் செய்து பட்டா கொடுக்கவேண்டுமென்று அரசாங்கம் ஆணையிட்டிருப்பதன் காரணமாக புதிதாக ஆக்கிரமிப்பு செய்து மேலும் பட்டா பெற்றுக்கொள்ளலாம் என்கிற மனப்போக்கு இந்த மாநிலத்திலுள்ளவர்களுக்கு ஏற்பட்டுவருகிறது. ஆகவே, ஏற்கெனவே ஆக்கிரமிப்பு செய்தவர்களையும் உடனடியாக அந்த நிலங்களிலிருந்து காலி செய்யவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிடுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதெல்லாம் தொடர்ந்து அரசாங்கத்தின் கவனத்தில் இருக்கிற விஷயம் என்று முன்பே நான் கூறினேன்.

திரு. ர. ஜீவரத்னம் : கனம் தலைவர் அவர்களே, அரசாங்கத் தரிசு நிலங்கள் என்று சில தனிப்பட்ட நபர்களுடைய நிலங்களையும் அந்தப் போராட்ட காலத்திலே ஆக்கிரமித்ததாக சர்க்காருக்கு ஏதாவது தகவல் வந்ததா ? அம்மாதிரி வந்திருந்தால் அதனுடைய விவரங்களை அறிவிக்க முடியுமா ?

[6th March 1965

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்த விவரங்களெல்லாம் இப்பொழுது என்னிடம் இல்லை.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, அன்னியர் இந்த நாட்டை ஆண்ட காலத்தில் அரிசனங்களுக்கு 'பஞ்சம தரிசு' என்ற பெயரில் கொடுக்கப்பட்ட நிலங்களைப் பொறுத்த வரையில் இன்றுவரைக்கும் பட்டா போட்டுக் கொடுத்து முடிந்ததாகத் தெரியவில்லை. ஒரு ஆட்சி போய் மறு ஆட்சி வந்தும்கூட, அந்த நிலங்கள் இன்னும் அரிசனங்களுக்குச் சரியாக வழங்கப்படவில்லை. பஞ்சாயத்து ஆட்சி வந்த பிறகு, அரிசனங்கள் இருக்கும் எந்த நிலமாக இருந்தாலும், அவர்களை வெளியேற்றுவது என்கிற நடவடிக்கை பொதுவாக இருந்துவருகிறது. ஆகவே, சர்க்கார் புது சட்டத்தை உருவாக்கியாவது அரிசனங்கள் உபயோகித்துக் கொண்டிருக்கும் நிலங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் அங்கத்தினர் அவர்கள் அன்னிய ஆட்சி முதற்கொண்டு சரித்திர பூர்வமான நிலைமையை எடுத்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி விவரமாகக் கூறினால் விடை அளிக்க முடியும்.

கம்போஸ்ட் உரம் விற்பனையில் நஷ்டம்

*165 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் கம்போஸ்ட் உரம் காலம் கடந்து விற்றதால் ரூ. 24,400 நஷ்டம் ஏற்பட்டது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) There was a loss of about Rs. 23,700 in the sale of compost during 1962–63 in the Madhavaram Milk Colony. The loss was however not due to any delay in the sale of compost. It was due to the fact that there was no large demand for the compost at the price of Rs. 9 per ton fixed by the department. Therefore, 3,919 tons of compost was sold in auction on 6th April 1963, which realized only Rs. 7,660, resulting in the loss referred to above; and

(*b*) in order to create a better demand for compost, the selling price of compost made out of dung and waste matter in the Milk Colony has since been fixed at Rs. 6 per ton.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, ஒரு மாடு ஓராண்டில் எவ்வளவு எருவைக் கொடுக்க முடியும் என்கிற கணக்கு இருக்கிறது. அந்த வகையிலே அந்தப் பண்ணையிலே இருக்கும் மாடுகள் எத்தனை? அந்த மாடுகள்மூலம் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு எரு கிடைக்கவேண்டுமோ, அந்த அளவுக்கு எரு கொடுக்கின்றனவா?